**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.188/2018

நாள்: 01.07.2025.

பெயர்: மாயவன் (பி.வா.சா.1) த/பெ: கலியன் (எ) கலியபெருமாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>...

1) தாவா சொத்துக்களுக்கு கீழ்புறம் சாலையும், அதற்கு கீழ்புறம் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்டத்தில் ஆஸ்பெட்டாஸ் சீட்டு போட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் எனக்கு நினைவு தெரிந்த காலம் முதல் இல்லை. என் பெயரில் மின் இணைப்பு இல்லை, வேறு பெயரில் மின் இணைப்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆஸ்பெட்டாஸ் சீட்டு வீட்டில் மின் விளக்கு எரிந்து வருகிறது என்றால் சரிதான், அதற்கு பக்கத்து வீட்டிலிருந்து மின் இணைப்பு கொடுத்துள்ளனர்.

2) தாவா 1வது அயிட்டத்தில் ஆஸ்பெட்டாஸ் சீட்டு போட்ட வீடானது 3 அடி மண் மேட்டிற்கு மேல் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் ஏற்கனவே அமைக்கப்பட்ட மண்மேடு ஆகும். ஆஸ்பெட்டாஸ் சீட்டு வீடு அமைக்கப்பட்ட பகுதியை தவிர மற்ற பகுதி 3 அடி பள்ளமாக இருக்கும் என்றால் சரியல்ல, ½ அடி தான் பள்ளமாக இருக்கும். ஆஸ்பெட்டாஸ் சீட்டு வீட்டிற்கு வாதி குடிநீர் பைப்பு வசதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்துக்களில் ஆஸ்பெட்டாஸ் சீட்டு வீட்டை தவிர வேறு குடியிருப்பு கட்டுமானம் இல்லை என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

3) தாவா 2ம் அயிட்ட சொத்துக்கும் சேர்த்து எனது தந்தை மு. கலியபெருமாள் பெயரில் 122 எண் பட்டா (பி.வா.சா.ஆ.3) உள்ளது என்றால் சரிதான். எனது எதிரிடை பாத்தியக்கோரிக்கையில் முதல் பரிகாரமாக எனக்கு தாவா 1வது அயிட்டம் சொந்தம் என்றும், எனது அனுபவத்தை இடையூறு

செய்யக்கூடாது என்றும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்தில் வாதி கட்டியுள்ள வீட்டை செயலுறுத்துக்கட்டளை மூலம் அகற்றிக் கொடுக்க பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது 2வது பரிகாரத்தின் படி எனக்கு முதல் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள முதல் பரிகாரத்தின்படி எனக்கு 2வது பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4) எனது எதிரிடைப் பாத்தியக் கோரிக்கையில் 1,2 அயிட்ட சொத்துப் பொறுத்து ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரைய ஆவணம் ஆகியவற்றை ரத்து செய்ய கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான் எதிரிடை பாத்தியக்கோரிக்கையை திருத்தம் செய்ய வேண்டும் என்று இடைநிலை மனு எண்.1/2023 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு மேற்படி ஆவணங்களைப் பொறுத்து மேற்படி மனுவினை தாக்கல் செய்ததற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பே மேற்படி ஆவணங்களைப் பற்றி எனக்கு தெரிந்த காரணத்தினால் இடைநிலை மனு எண்.01/2023ன் படி பரிகாரம் கிடைக்காது என்றால் சரியல்ல.

5) தாவா முதலாம் அயிட்டத்தைப் பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.12 ஆன பட்டா எண்.1002ல் சொத்தைப் பொறுத்து வரிகள் எதாவது செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது மேற்படி ரசீதானது என்னிடம் தான் உள்ளது என்றால் இல்லை, பட்டா மட்டும் தான் உள்ளது. 1985ல் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு வரி செலுத்த வாதியின் தந்தை மொட்டையன் மகன் கலியன் என்கிற கலியபெருமாளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, எங்கள் சொத்திற்கு அவர்களுக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

6) மு. கலியபெருமாள் பெயருக்கு தாவா 1வது அயிட்ட சொத்திற்கு பட்டா எண்.122 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா எண்.122 ற்கு செலுத்தப்பட்ட ரசீதுகள் எதாவது என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம்

இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் மேற்படி பட்டா எண்.122 சொத்தைப் பொறுத்து வாதியின் தந்தை மொட்டையன் மகன் கலியபெருமாள் 1993 மற்றும் 2000 ஆண்டுகளில் செலுத்திய ரசீதுகள் என்றால் சரிதான். வாதியின் தந்தை மொட்டையன் மகன் கலியபெருமாளுக்கு பட்டா எண்.122 வா.சா.ஆ.1 வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா 1வது அயிட்ட சொத்தில் வாதியின் தந்தை குடியிருந்து வந்து வருவாய் துறை மற்றும் ஊராட்சியால் வழங்கப்பட்டுள்ள ரசீதுகள் வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவை 2ம் அயிட்ட சொத்திற்கானது ஆகும்.

7) நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் வருவாய் துறையினால் ஏற்பட்ட தவறின் காரணமாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் கொடுக்காது என்றால் சரியல்ல. தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் ஆதியிலிருந்து வாதி குடும்பத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட வாதியின் தந்தை கூரை வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல, அவர் 2வது அயிட்டத்தில் தான் குடியிருந்து வந்தார். தாவா 1வது அயிட்ட சொத்தில் வாதியின் தந்தை குடியிருந்த கூரை வீட்டை இடித்து விட்டு ஆஸ்பெட்டாஸ் சீட் வீடு வாதியால் அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வாதி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லிவிட்டு ஆக்கிரமிப்பை அகற்றக் கோராமல் கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8) என்னால் எதிரிடை பாத்தியக்கோரிக்கையின் படி கேட்டுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கட்டுமானத்தின் நீளம், அகலம் குறிப்பிட்டு கூறாததன் காரணத்தினால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் வாதிக்கு பாத்தியமான ஏற்றுக்கொண்ட 2வது அயிட்ட சொத்திற்கும் எனது தந்தை மு.கலியபெருமாள் பெயர் தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது போல் ஏற்கனவே தாவா 1வது அயிட்ட சொத்திற்கு வாதயின்

தந்தை பெயரும், எனது தந்தை பெயரும் கலியபெருமாள் என உள்ளதால் குழப்பத்தில் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும், எதிரிடைப் பாத்தியக்கோரிக்கை தள்ளுபடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>பிரதிவாதிகள் தரப்பு மறுவிசாரணை...</u>**

1) வாதி 2 அயிட்ட சொத்தைப் பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்களுக்கு வடபுறம் எனக்கு சொந்தமான நிலம் எதுவும் இல்லை.

ஒப்பம்/–திரு. ம.சி. கண்ணதாசன், எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். /20**

2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 01–ஆம் நாள் செவ்வாய் கிழமை **வா.சா.1.** (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வயது | : |
| த/பெ | : | தொழில் | : |
| கிராமம் | : | மாவட்டம் | : |
| வட்டம் | : | | |

---

**வா.சா. 1–ன் முதல் விசாரணை**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | | | |
|---|---|---|---|
| | | | |

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**<u>அசல் வழக்கு எண். /20</u>**

நாள்: 01.07.2025.

பெயர்: (வா.சா.1) த/பெ:

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி...</u>**

| | | | |
|---|---|---|---|

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். /20

நாள்: 01.07.2025.

பெயர்: (பி.வா.சா.1) த/பெ:

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

**அசல் வழக்கு எண். /20**

2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 01–ஆம் நாள் செவ்வாய் கிழமை **வா.சா.1.** (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | சமயம் | : |
| த/பெ | : | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : கிளை மேலாளர் (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா) |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

**வா.சா. 1–ன் முதல் விசாரணை**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளையில் கிளை மேலாளராக பணியாற்றி வருகின்றேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**E.P. /20 IN O.S. /20**

2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 01–ஆம் நாள் செவ்வாய் கிழமை **வா.சா.1.** (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | சமயம் | : |
| க/த/பெ | : | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

<u>**ம.சா.1 (மனுதாரர்)–ன் முதல் விசாரணை**</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.